# TENDER FORM FOR THE TRANSPORT CONTRACT FOR THE YEAR 2023-2024

**THE TAMIL NADU COOPERATIVE MARKETING FEDERATION LIMITED**
**91, St. Mary's Road, Chennai – 600 018.**
**Phone: 24936003, 24936004, 24936120, 24936046**
**E.Mail: tanfedfertsection@gmail.com**
**Website: www.tanfed.tn.gov.in**

Name of the TANFED Region :

Name of the Centre/Region for which Tender quoted :

(Signature of Tenderer)

**THE TAMIL NADU COOPERTAIVE MARKETING FEDERATION LIMITED,**

**91, St. Mary's Road, Chennai – 600 018**

**Phone: 24936003, 24936004, 24936120, 24936046,**

**E.Mail: tanfedfertsection@gmail.com  Website: www.tanfed.tn.gov.in**

**ANNEXURE – I**

**TENDER OFFER FORM FOR THE MOVEMENT OF CHEMICAL FERTILIZERS FOR THE YEAR 2023-24**

**PART A – PARTICULARS OF TENDERER**

| | |
|---|---|
| Name of the Region | |
| Name of the District | |
| Centre | |
| **PART – (A)** | |
| 1.Name of the tenderer | |
| 2. a. Tenderer's complete address | |
| b. Tenderers Telephone/E-Mail | |
| 3. a) Status of the tenderer (Individual Partnership/Private Public Co., etc.) | |
| b) Authorisation letter to sign the Tender documents whether enclosed | |
| 4. a. Whether a copy of the partnership deed or Articles of Association is enclosed | |
| b.Whether the tenderer has previously worked as Tanfed transport contractor (period to be noted) | |
| c.Whether the tenderer has worked as Transport contractor for any Government Department or Government Corporation or Company, if so, please quote the period with details | |
| 5. Details of Earnest Money Deposit(Enclosed) | |
| a. Amount | Rs.1,00,000/- |
| b. D.D. No. and Date | |
| c. Name of the Bank | |
| Signature of Tendererer with Seal | |

**Details of Lorries Owned**

| S. No | Lorry Registration No. | Permit Valid upto | Road Tax Permit Valid upto | Insurance Valid upto | Name of the Owner & Contact Mobile Number |
|---|---|---|---|---|---|
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |
| 4 | | | | | |
| 5 | | | | | |
| **Details of command Lorries with Tenderer (apart from own lorries) details to be furnished for the command lorries agreement with respective lorry owners for availing command Lorry)** | | | | | |
| 1 | | | | | |
| 2 | | | | | |
| 3 | | | | | |

| | |
|---|---|
| 6. Latest solvency certificate obtained with in a period of 3 months (to the value of Rs.2,00,000/- (Rs.Two Lakhs only) to be enclosed | |
| 7. Latest Income Tax return copy (whether enclosed for the year) | |
| 8. GST Registration No. | |
| 9. PAN NO | |
| 10. Self Declaration.Not Blacklisted by any Authority/ Firm / Organisation | |

Signature of Tendererer with Seal

**PART-B**

**RATE OFFER**

1. Name of the Region :
2. Name of the Centre :
3. Name of the Rail Head :

Schedule of Rates

| Details | Rate Rs. Per MT. | **Rate Rs. Per MT. For mini truck** |
|---|---|---|
| a. Wagon Clearance Charges (Clearance of Fertilisers from the Rail Wagon in to the Trucks-Rate quoted per Mt.) | | |
| b. Loading Charges at the godowns (Loading Charges at various loading godowns) | | |
| c. Unloading charges at the godowns (Unloading Charges at various godowns) | | |
| d. Transport Charges to be quoted for the following slab distances | Rate Per MT/KM | |
| (i) For the distance up to 7 Kms (0 to 7 Kms) | | |
| (ii) For the distance from 8 Kms to 20 Kms (Rate per MT/per Km) | | |
| (iii) For the distance from 21 Kms to 50 Kms (Rate per MT/per Km) | | |
| (iv) For the distance from 51 Kms to 75Kms (Rate per MT/per Km) | | |
| (v) For the distance from 76 Kms to 100 Kms (Rate per MT/per Km) | | |
| (vi) For the distance from 101 Kms to 125 Kms (Rate per MT/per Km) | | |
| (vii) For the distance from 126 Kms to 150 Kms (Rate per MT/per Km) | | |
| (viii) For the distance from 151 Kms to 175 Kms (Rate per MT/per Km) | | |
| (ix) For the distance from 176 Kms to 200 Kms (Rate per MT/per Km) | | |
| (x) For the distance from 201 Kms (Rate per MT/per Km) | | |
| **(xi) For the distance from 201 Kms to 250 Kms (Rate per MT/per Km)** | **Not applicable** | |
| **(xii) For the distance from 251 Kms to 300 Kms (Rate per MT/per Km)** | **Not applicable** | |
| **(xiii) For the distance from 301 Kms to 350 Kms (Rate per MT/per Km)** | **Not applicable** | |
| **(xiv) For the distance from 351 Kms and above (Rate per MT/per Km)** | **Not applicable** | |
| **e. For Hills movement % of Increase required in the normal rate for the applicable Hill distance/Rate** | **Not applicable** | |

(Signature of Tenderer with Seal)

# தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் X-401

91, தூய மேரி சாலை, சென்னை–18.

Phone: 24936003, 24936004, 24936120, 24936046,

E.Mail: tanfedfertsection@gmail.com

Website: www.tanfed.tn.gov.in


## ஒப்பந்தப்புள்ளி கேட்பு படிவத்தை நிரப்புவது குறித்து அறிவுரைகள்

1. இவ்வொப்பந்த புள்ளி தொடர்பான ஆவணங்கள் இதில் பங்கு பெறுபவர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட முகவரால் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பமிட வேண்டும்.

2. இதில் கையொப்பமிடுபவர், தான் எந்த அந்தஸ்தில் கையொப்பமிடுகின்றார் என்று தெளிவாக குறிப்பிட வேண்டும் (உ.ம்) உரிமையாளர், பங்குதாரர், நிர்வாக இயக்குநர்.

3. ஒரு கூட்டு நிறுவனமானால் எல்லா பங்குதாரர்களது பெயரும் முகவரியும் இணைக்கப்பட வேண்டும். மேலும் ஒப்பந்தபுள்ளி ஆவணங்களில் அனைத்து பங்குதாரர்களும் கையொப்பமிட வேண்டும். அல்லது அவர்கள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்ட பங்குதாரர் கையொப்பமிடலாம். அங்கீகார கடிதம் இணைக்கப்படவேண்டும்.

4. ஒரு பிரைவேட் லிமிடெட் நிறுவனமானால் இயக்குநர்கள் அனைவரது பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட வேண்டும். மேலும் ஒப்பந்த புள்ளி ஆவணங்களில் கையொப்பமிடுபவர், நிறுவனத்தின் சார்பில் கையொப்பமிட தகுதியுள்ளவர் என்று சான்றளிக்கப்பட வேண்டும்.

5. ஒரு பிரிவினை செய்யப்படாத இந்து கூட்டுக் குடும்பமானால் குடும்ப உறுப்பினர்களின் பெயர்கள் தெரிவிப்பதுடன் ஒப்பந்த புள்ளி ஆவணங்கள் குடும்பத்தின் 'கர்த்தா' வினால் கையொப்பமிடப்படுவதுடன் அவரது நிலை அவரது கையொப்பத்தின் கீழே குறிப்பிடப்பட வேண்டும்.

6. சுமையுந்து ஒட்டுநர்கள் உரிமையாளர்கள் ஒன்றியம்/குழு மற்றும் கூட்டுறவு சங்கங்களால் ஒப்பந்தபுள்ளி கேட்பு கோரப்பட்டால் தன் நிர்வாக குழுவின் உறுப்பினர்கள் அனைவரது பெயரும் முகவரியும் இணைக்கப்பட வேண்டும். இத்துடன் ஒப்பந்தபுள்ளி ஆவணங்களில் கையொப்பமிடுபவர் நிறுவனத்தின் சார்பில் கையொப்பமிட அதிகாரம் பெற்றவர் என சான்றளிக்கப்பட வேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி கேட்பு அளிப்பவர் /**
**ஒப்பந்தப்புள்ளி பங்குபெற அதிகாரம் அளிக்கப்பட்டவர் ஒப்பம்**

..2

7. ஒப்பந்த புள்ளி கேட்பு அளிப்பவர்கள் சொந்தமாக 2 சுமையுந்து உரிமை உள்ளவர்களாகவும், 3 சுமையுந்துகள் பொறுப்பில் இருப்பவராகவும், ஒவ்வொரு சுமையுந்தும் குறைந்தபட்சம் 10 டன்கள் சுமந்து செல்லக்கூடிய கொள்ளளவு கொண்டதாகவும், சொத்து மதிப்பீடு சான்றிதழை முன்னிலை செய்பவராகவும் இருக்க வேண்டும். சுமையுந்து பொறுப்பில் இருப்பின் சுமையுந்து உரிமையாளருடன் மேற்கொண்ட ஒப்பந்த நகல் கண்டிப்பாக இணைத்திருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒவ்வொரு மையத்திற்கும் தனித் தனியாக சுமையுந்து ஊர்திகளின் **(Dedicated Vehicles separately for each centre)** விவரங்களை கண்டிப்பாக அளித்திருக்க வேண்டும். ஒரு மையத்திற்கு முன்னிலைப்படுத்தும் சுமையுந்தினை பிற மையத்திற்கு முன்னிலைப்படுத்தக் கூடாது.
8. எரியோடு உர மையத்திற்கான மினி டிரக்குகள் 5 மெட்டன்களுக்கு குறையாத உத்தேச அளவு கொண்ட இரண்டு மினி டிரக்குகள் சொந்தமாகவோ (அல்லது) பொறுப்பில் உள்ளவராகவும், சொத்து மதிப்பீடு சான்றிதழை முன்னிலை செய்பவராகவும் இருக்க வேண்டும். சுமையுந்து பொறுப்பில் இருப்பின் சுமையுந்து உரிமையாளருடன் மேற்கொண்ட ஒப்பந்த நகல் கண்டிப்பாக இணைத்திருக்க வேண்டும். மினி டிரக்குகள் எரியோடு உர ஆலையிலிருந்து ஒவ்வொரு நடையிலும் 4 மையங்கள் வரை மாநிலம் முழுவதும் உர நகர்வு செய்ய வேண்டும்.
9. வேறு ஒருவர் சார்பாகவோ, ஒரு நிறுவனத்தின் சார்பாகவோ கையொப்பமிடுபவர் செய்திறனுள்ளதொரு பவர் ஆப் அட்டர்னி-ஐ (Power of Attorney) முன்னிலைப்படுத்த வேண்டும்.
10. ஒப்பந்தப் புள்ளி கேட்பு ஆவணங்கள் இணைக்கப்பட்டு உறையிலிட்டு மூடி முத்திரையிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆவணங்களுக்கான காப்புத் தொகை ரூ.1,00,000/-க்கான பணவிடைத்தாள் இணைக்கப்பட வேண்டும். இதற்கு முந்தைய ஆண்டுகளில் செலுத்தப்பட்ட பிணை வைப்புத் தொகை இணையத்தில் நிலுவையிலிருந்தாலும் புதியதாக காப்புத் தொகை கட்ட வேண்டும்.
11. காப்புத் தொகை ரூ.1,00,000/-க்கான பணவிடை இல்லாத ஒப்பந்த புள்ளிகள் நிராகரிக்கப்படும்.
12. எந்தவொரு ஒப்பந்த புள்ளியையும் காரணம் காட்டாது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, ஏற்றுக் கொள்ளவோ, நிராகரிக்கவோ இணையத்தின் மேலாண்மை இயக்குநருக்கு அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்கு உரிமை உண்டு. மேலும் இணையம் எந்தவொரு ஒப்பந்தப் புள்ளிதாரருடனோ அல்லது அனைவருடனோ பேச்சு வார்த்தை செய்யும் உரிமையுடைதாகும்.
13. மேற்கண்ட அறிவுரைப்படி சமர்ப்பிக்கப்படாத ஒப்பந்தப் புள்ளிகள் நிராகரிக்கப்பட ஏதுவாகும்.

ஒப்பந்தப்புள்ளி கேட்பு அளிப்பவர் /
ஒப்பந்தப்புள்ளி பங்குபெற அதிகாரம் அளிக்கப்பட்டவர் ஒப்பம்

தமிழ் நாடு கூட்டுறவு விற்பனை இணையம் லிட் X-401
91, தூய மேரி சாலை, சென்னை – 18, தொலைபேசி: 24936003, 24936004, 24936120, 24936046
(மின் அஞ்சல்) E-Mail tanfedfertsection@gmail.com

**உர நகர்வுப்பணி சுமையூர்தி ஒப்பந்தம் மேற்கொள்வதற்காக ஒப்பந்தப் புள்ளி கேட்பு நிபந்தனைகள்**

1. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் பின்வரும் மையம்/மண்டலத்தில் அமைந்துள்ள/அமையவுள்ள கிடங்குகளிலிருந்தும், மத்திய, மாநில சேமிப்பு கிடங்குகளிலிருந்தும் உர நிறுவனங்களின் உற்பத்தி மையம் இருப்பு கிடங்குகளிலிருந்தும் இரசாயன உரங்களையும் இணையத்தினரால் தயார் செய்யப்படும் கலப்பு உரங்களையும், பூச்சி மருந்துகள் மற்றும் இதர பொருட்களையும் மண்டலத்தின் தொடர்புடைய மற்றும் இதர மாவட்டத்திலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் விற்பனை சங்கங்களுக்கும் அல்லது இணைய அலுவலர்களால் உத்திரவிடப்படும் இடங்கள் ஆகியனவற்றுக்கும், மண்டலம் மையம் தொடர்புடைய இரயில் வேகன் மூலம் வரும் உரங்களை கிட்டங்கிகளுக்கு கொண்டு வந்து சேர்க்கவும், மண்டலம் தொடர்புடைய மாவட்டம் மற்றும் இதர மாவட்டங்களுக்கும் கொண்டு செல்ல/ கொண்டு வர மற்றும் இணைய கிடங்குகளில் பெறப்படும் உரம், பூச்சி மருந்து மற்றும் இதர பொருட்களை இறக்கி வைக்க டன் ஒன்றுக்கு ஏற்றுக் கூலி, இறக்குக்கூலி, சுமையுந்து வாடகை விவரங்கள் ஒவ்வொரு இனத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கேட்பு படிவத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

| மண்டலம் | மையம் | |
|---|---|---|
| திருவண்ணாமலை | திருவண்ணாமலை | டெண்டர்கள் அளிப்பதற்கான காலம் 15.12.2023 முற்பகல் 11.00 மணி வரை |
| புதுக்கோட்டை | புதுக்கோட்டை | |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மற்றும் அவிநாசி (சேவூர்) | |
| எரியோடு உர ஆலை, வேடசந்தூர் தாலுக்கா, திண்டுக்கல் மாவட்டம் | மினி டிரக் மூலமான உர நகர்வு – மாநிலம் முழுவதும் | |

(மேற்குறிப்பிட்ட உரநகர்வு மையங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக ஒப்பந்தப்புள்ளிகள் அளிக்கப்பட வேண்டும்).

2. சட்ட சம்பந்தமான சகல காரியங்களையும், மேற்கொள்வதற்கு தகுதியானவர்கள் மட்டும் டெண்டரில் கலந்து கொள்ள வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளி கேட்பு அளிப்பவர் /
ஒப்பந்தப்புள்ளி பங்குபெற அதிகாரம் அளிக்கப்பட்டவர் ஒப்பம்

..2..

3. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் குறைந்தபட்சம் 10 டன்கள் சுமந்து செல்லக்கூடிய 2 சுமையுந்துகள் உரிமையுடையவராகவும் தன் பொறுப்பில் மூன்று சுமையுந்துகள் பெற்றிருப்பவராகவும், சொத்து மதிப்பீடு சான்றிதழினை (Solvency Certificate) முன்னிலை செய்பவராயும் இருக்க வேண்டும். சொந்த மற்றும் பொறுப்பில் உள்ள சுமையுந்து வாகனங்களின் R.C, Permit, (தேவைப்படும் நேர்வுகளில் மண்டலம் தொடர்புடைய தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கான உர நகர்விற்கு அண்டை மாநில பர்மிட் தேவைப்படும் நேர்வுகளில் அதனை நிறைவு செய்திட வேண்டும்) சாலை வரி மற்றும் காப்பீடு ஆகியன நடப்பில் உள்ளதற்கான சான்று ஆவணங்களின் நகல்களையும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் நகல்களையும் ஒப்பந்தப்புள்ளி கேட்புடன் இணைத்து அளிக்கப்பட வேண்டும்.

4. ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒவ்வொரு மையத்திற்கும் தனித்தனியாக சுமையுந்து ஊர்திகளை (Dedicated Vehicles for each centre separately) முன்னிலைப்படுத்தி விவரங்களை கண்டிப்பாக அளிக்க வேண்டும். ஒரு மையத்திற்கு முன்னிலைப்படுத்தும் சுமையுந்தினை பிற மையத்திற்கு முன்னிலைப்படுத்தக் கூடாது.

5. ஏரியோடு உர மையத்திற்கு மினி டிரக்குகள் 5 மெ.டன்களுக்கு குறையாத உத்தேச அளவு கொண்ட 2 மினி டிரக்குகள் குறைந்தபட்சமாக முன்னிலைப்படுத்த வேண்டும். இந்த இரண்டு மினி டிரக்குகளும் சொந்தமாகவோ அல்லது பொறுப்பில் உள்ளதாகவும் முன்னிலைப்படுத்தி சொத்து மதிப்பீடு சான்றிதழ் நகல்களையும் ஒப்பந்தப்புள்ளி கேட்புடன் இணைத்து அளிக்கப்பட வேண்டும். மினி டிரக்குகள் ஒவ்வொரு நடையிலும் நான்கு மையங்கள் வரை டெலிவரி அளிக்கும் வகையிலும் மாநிலம் முழுவதும் நகர்வு செய்யக்கூடிய அளவில் நல்ல தகுதி நிலையில் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

6. அ) நடப்பு ஆண்டிலோ அல்லது அதற்கு முந்தைய ஆண்டிலோ மேற்படி இணையத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்து ஒப்பந்த பணியாற்றியவரும் ஒப்பந்ததாரர் குறைந்த விலைப்புள்ளி சுமையுந்து ஒப்பந்தத்தை ஒப்பு கொண்டு மண்டல அலுவலரின் ஆணைப்படி உரங்களை சுமையுந்து மூலமாக எடுத்துச் சென்று சேர்ப்பிக்காமலிருந்து இதன் மூலமாக இணையத்திற்கு கெட்ட பெயர் அல்லது பொருள் நஷ்டம் ஏற்பட்டு இருந்தால் மேற்படி ஒப்பந்ததாரரோ அல்லது அவரை சார்ந்துள்ள நிறுவனமோ அல்லது அவரைச் சார்ந்துள்ள தனி நபர்களோ அல்லது அவரது ஏஜெண்டாக பணிபுரிந்தவர்களோ தற்போது ஒப்பந்தப்புள்ளி எடுப்பதற்கு தகுதி அற்றவர்கள் ஆவார்கள்.

ஆ) மேற்சொல்லப்பட்ட நபர்களின் அல்லது அவர்களுடைய நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளி கேட்புகள்/ஒப்பந்தப்புள்ளிகள் இணையத்திற்கு எவ்வளவு சாதகமான முறையில் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் இவர்களுடைய ஒப்பந்த புள்ளிகளை தள்ளுபடி செய்வதற்கு இணையத்தின் மேலாண்மை இயக்குநர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு. இதில் குறிப்பிட்டுள்ள விலைப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாளிலிருந்து 3 மாதங்களுக்கு செயல்திறன் உடையனவாகும்.

7. அ) ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவர்கள் முன்வைப்புத் தொகை (EMD) ஒப்பந்தப்புள்ளி டெபாசிட்டாக ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) 'தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்' சென்னை, என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க கேட்பு வரைவுடன் (Demand Draft) மூலமாக செலுத்தப்பட வேண்டும்.

ஆ) மேற்குறிப்பிட்ட முன்வைப்புத் தொகை பணவிடை தாளை நிரப்பப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பாரத்துடன் இணைப்பதுடன் Rs.2,00,000-க்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) குறையாத சமீபத்தில் மூன்று மாதங்களுக்குள்ளாக பெறப்பட்ட சொத்து மதிப்பு சான்றிதழையும் (சால்வன்சி சான்றிதழ்) (வருவாய்த்துறையின் சான்றளிக்கப்பட்ட அலுவலரால் அளிக்கப்பட்ட சால்வன்சி சான்றிதழ் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்.) (வங்கிகள் போன்றவற்றால் அளிக்கப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) இணைத்து மூடி முத்திரையிட்டு உறையின் மீது உர நகர்வு

ஒப்பந்துபுள்ளி எனவும் ......................................மண்டலம்......................................மையம் எனவும் குறிப்பிட்டு **மையங்களுக்கு தனித்தனியாக 15.12.2023 முற்பகல் 11.00 மணிக்குள்** கேட்பு வரைவுடன் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பகுதி 'அ' மற்றும் பகுதி 'ஆ' தனித்தனியாக உறைகளிலிட்டு டான்பெட், 91, தூயமேரி சாலை, சென்னை–18 என்ற முகவரியிட்டு டான்பெட் தலைமை அலுவலகத்தின் உரப்பிரிவில் உள்ள டெண்டர் பெட்டியில் உரிய நேரத்திற்குள் அளிக்கப்படவேண்டும். காலதாமதமாக பெறப்படும் டெண்டர் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.

இ) ஏற்கனவே இணையத்தில் செலுத்தியுள்ள டெபாசிட் தொகை ஏதுமிருப்பின் அத்தொகை தற்போதைய ஒப்பந்தப்புள்ளியில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. எனவே புதிதாக ஒவ்வொரு மையத்திற்கும் இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு டெபாசிட் தொகை செலுத்தப்பட வேண்டும்.

8. மேற்படி ஒப்பந்தப்புள்ளி கேட்புகள் (டெண்டர்கள்) மூடி முத்திரையிட்ட உறைகள் 15.12.2023 நண்பகல் 12.00 மணிக்கு வருகை தந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் இணைய ஒப்பந்தப் புள்ளிக் குழுவால் திறக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

9. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் அனுமதிக்கப்பட்டவுடன் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் ரூ. 100/– மதிப்புள்ள முத்திரை காகிதத்தில் (3 நகல்கள்) முறைப்படியான ஒப்பந்தப் பத்திரம் எழுதி கொடுக்கப்பட வேண்டும். அதன் பின்னரே உர நகர்வு பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

10. விலைப்புள்ளிகள் ஒப்புக் கொள்ளப்பட்டு நியமனம் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்பத்திரம் அளித்து பணி மேற்கொள்ளப்பட்ட நபருடைய பிணை வைப்புத் தொகை ரூ.1,00,000/– வட்டியில்லாத பிணை வைப்புக் கணக்கிற்கு மாற்றப்படும் உர நகர்வு ஒப்பந்தக் காலம் முடிந்த பிறகு கணக்குகள் சரிபார்த்து மண்டல மேலாளரின் பரிந்துரைக்குப்பின்னர் காப்புத் தொகை திருப்பித் தரப்படும்.

11. ஏற்றுக் கொள்ளாத / தேர்வு செய்யாத ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் செலுத்திய முன்வைப்புத் தொகை திருப்பி அளிக்கப்படும்.

12. **ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் இணையத்தின் அம் மையத்தில் உர நகர்வு பணி நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் ஒரு ஆண்டு காலத்திற்கு ஒப்பந்ததாரராக நியமனம் செய்யப்படுவர். இணையம் விரும்பினால் மேலும் 6 மாத காலம் நீட்டித்து ஒப்பந்ததாரர் ஏற்கனவே உள்ள ஒப்பந்த விதிகளின்படி கட்டாயமாக பணியாற்றிட வேண்டும். இதற்காக கூடுதல் கட்டணம் ஏதும் அனுமதிக்கப்படாது.**

13. ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு நியமிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் மண்டல மேலாளர் ஆணைப்படி உரங்களை சரிவர எடுத்துச் செல்லாமல் இணையத்திற்கு அவப்பெயர் மற்றும் பொருள் நஷ்டங்கள் ஏற்படக்காரணமாக இருந்தால் இவ்விரு நஷ்டங்களையும் மேற்படி ஒப்பந்ததாரர் இணையம் நிர்ணயம் செய்தபடி நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் நஷ்ட ஈடு நிர்ணயம் செய்வதில் இணையத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

14. இரயில் மூலம் பெறப்படும் உரங்களுக்கு இணைய மண்டல மேலாளரால் அளிக்கப்படும் இரயில்வே இரசீதுகளை/ஆணைகளை பெற்றுக்கொண்டு மண்டல மேலாளர் அளிக்கின்ற அனுப்புகை ஆணைப்படி உரங்களை நகர்வு செய்யவேண்டும். இதில் ஏற்படும் காலதாமதக் கட்டணங்கள் (Demurrage and Wharfage) ஒப்பந்ததாரர் ஏற்றுக்கொண்டு இரயில்வே நிர்வாகத்திற்கு ஒப்பந்ததாரர்களது பொறுப்பில் செலுத்தப்படவேண்டும்.

**ஒப்பந்தப்புள்ளி கேட்பு அளிப்பவர் /**
**ஒப்பந்தப்புள்ளி பங்குபெற அதிகாரம் அளிக்கப்பட்டவர் ஒப்பம்** ..4..

15. ஒன்றரை ஆண்டுகாலம் நிறைவுற்ற பின்னர், இணையம் மற்றும் ஒப்பந்ததாரர் விருப்பத்தின் அடிப்படையில் மேலும் 6 மாத காலம், மற்றும் அதற்கு மேற்பட்ட காலத்திற்கு பல்வேறு நேர்வுகளில் இணையத்தால் ஒப்பந்தக் கட்டணம் உயர்வின்றி, ஒப்பந்தம் நீட்டிக்க அனுமதிக்கப்படும்., நியமிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் தங்களது ஒப்பந்தத்தை வேறு ஒருவருக்கு இணையத்தின் முன் அனுமதியின்றி துணை ஒப்பந்தமாக (Sub Contract) விட்டுள்ளதாக தெரிந்தால் நியமிக்கப்பட்ட ஒப்பந்தம் ரத்து செய்வதுடன் அவர் கட்டிய பிணை வைப்புத் தொகையும் இணையத்தால் பறிமுதல் செய்யப்படும்.

16. டெலிவரி எடுக்க வேண்டிய இடத்திற்கும், சரக்குகளை கொண்டு சேர்க்க வேண்டிய இடத்திற்கும், இடையே உள்ள தூரம் இணைய மண்டல அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேட்டின்படி தொலை தூரங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

17. இரசாயன உர மூட்டைகளையும் பூச்சி மருந்து சரக்குகளையும் ஒரு நாளைக்கு 150 டன் அளவிற்கு குறையாமல் கிடங்கிலிருந்து டெலிவரி எடுத்துச் செல்ல உத்திரவு பெற்ற 3 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு உர மூட்டைகளை நல்ல முறையில் கொண்டுபோய் சேர்த்து சங்கங்களிடமிருந்து உரவிற்பனை பட்டியல்கள், டெலிவரி செலான்கள் / ரசீதுகள் ஆகியவற்றுடன் உரிய சரக்கு வரவு ரசீதுகளை (Goods Receipt Note) டெலிவரி அளிக்கப்பெற்ற பின்னர் 5 நாட்களுக்குள் இணையத்தில் சமர்ப்பிக்க வேண்டும். மண்டல மேலாளர் நிர்ணயிக்கும் 3 நாட்களுக்குள் டெலிவரியை பூரணமாக முடிக்க வேண்டும் உர விற்பனை பட்டியல்கள், டெலிவரி செலான்கள் / ரசீதுகளில் /சரக்கு வரவு ரசீதுகளில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தால் அங்கீகரித்து அனுமதிக்கப்பட்ட நபரின் கையொப்பம் பெற்று வருவதுடன் சங்கத்தின் முத்திரையையும் பெற வேண்டும்.

18. சரக்கினை 3 நாட்களுக்குள் எடுத்துச் செல்ல தவறினால் நாள் ஒன்றுக்கு லோடு ஒன்றுக்கு ரூ.200/- வீதம் அபராதத் தொகையாக உரநகர்வு சுமையுந்து ஒப்பந்ததாரர் சமர்ப்பிக்கும் பில் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும். மேலும் இணையம் வேறு வாகனங்களை கூடுதல் வாடகைக்கு (Market Rate) அமர்த்தி எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்வதோடு இதனால் ஏற்படும் அனைத்து கூடுதல் செலவினங்களுக்கும் ஒப்பந்தக்காரரை பொறுப்பாக்கி, அபராதத்துடன் கூடுதல் செலவினத் தொகையையும் சேர்த்து வசூலிக்கவும் இணையத்திற்கு அதிகாரமுண்டு.

19. முறையாக சரக்கினை எடுத்துச் செல்லத் தவறினாலும், சரக்கு போக்குவரத்தை சரியானபடி செய்யாவிட்டாலும், சரக்கு எடுத்துச் செல்வதில் ஏதும் குறைவு, இழப்புகள் ஏற்பட காரணமாக இருந்தாலும், புகார்கள் ஏதும் பெறப்பட்டாலோ ஒப்பந்தக்காலம் முடியும் முன்பே ஒப்பந்தத்தை ரத்து செய்யவும், நட்டத் தொகைகளை ஒப்பந்ததாரரிடம் இருந்து வசூலிக்கவும், காப்புத் தொகையை பறிமுதல் செய்யவும், இணையத்திற்கு அதிகாரம் உண்டு.

20. அ) ஒப்பந்ததாரர்கள் சரக்குகளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஒப்படைத்த 5 நாட்களுக்குள் சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட நபரின் ஒப்புகை செய்யப்பட்ட அசல் நகல் உர விற்பனை பட்டியல்கள் டெலிவரி செலான்கள் மற்றும் உரிய சரக்கு வரவு ரசீதுகளுடன் இணைத்து, மண்டல அலுவலகத்தில் அளிக்கப்பட வேண்டும். (அவ்வாறு செய்வதில் சிரமம் இருப்பின் கருணை நாட்களாக கூடுதலாக 5 நாட்கள் மட்டும் சிறப்பு நேர்வுகளில் மண்டல மேலாளரால் அளிக்கப்படும்.) டெலிவரி செலான்கள் உர ரசீதுகளின் ஜெராக்ஸ் நகல்கள் ஏற்றுக் கொள்ள இயலாது.

**ஒப்பந்தப்புள்ளி கேட்பு அளிப்பவர் /**
**ஒப்பந்தப்புள்ளி பங்குபெற அதிகாரம் அளிக்கப்பட்டவர் ஒப்பம்**

...5..

ஆ) மேற்கண்ட 10 நாட்களுக்கு மேல் அடுத்து 10 நாட்கள் வரை (அதாவது சரக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஒப்படைத்த 20 நாட்கள்) காலங்கடந்த ஒவ்வொரு நாளுக்கும் லோடு ஒன்றுக்கு ரூ.100/– வீதம் அபராத தொகை, ஒப்பந்ததாரரிடமிருந்து வசூலிக்கப்படும். ஒட்டுமொத்தமாக 20 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்படின் இணையத்திற்கு ஏற்படும் வட்டி நட்டத் தொகை 18% வீதம் வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இ) மேற்கண்ட 20 நாட்களுக்கு மேல் 60 நாட்கள் வரை மட்டுமே பெறப்படும் உர விற்பனை பட்டியல்கள், டெலிவரி செலான்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கத்தில் சரக்கு பெற்றதற்கான வரவு ரசீது ஆகியவற்றிற்கு நாளொன்றுக்கு ரூ.100/– வீதம் அபராதத் தொகையுடன் சம்பந்தப்பட்ட உர விற்பனை பட்டியலுக்கான தொகை மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து கிடைக்கும் வரையிலான காலத்திற்கான வட்டி 18% ஒப்பந்ததாரரிடம் வசூலிக்கப்படும்.

ஈ) 60 நாட்கள் கழித்து ஒப்பந்ததாரால் தாக்கல் செய்யப்படும் உர விற்பனை பட்டியல்கள் டெலிவரி செலான்கள் மற்றும் சரக்கு வரவு ரசீது முதலியவற்றிற்கு மேலே குறிப்பிட்டபடி தொகை பெறும் தேதி வரையில் அபராதத் தொகையுடன் வட்டி வசூலிப்பதுடன் இந்நேர்வில் மேற்படி சரக்கு ஏற்றிச் சென்றதற்கான போக்குவரத்து கட்டணமும் வழங்கப்படவும் மாட்டாது.

உ) மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்திய பிணை வைப்பு காப்புத் தொகை ஒப்பந்தக்காலம் முடிவடைந்த பின் சரக்கு கொண்டு போவதில் குறைவு அல்லது சரக்கு கொண்டு போவதில் சேதமடைந்துவிடுதல் மற்றும் வருமான வரிக்கான தவணைப் பணம் பிடிப்பு, **சரக்கு மற்றும் சேவை வரி செலுத்துதல்** மற்றும் **தணிக்கை** நிலுவைகள் ஆகியவைகள் சரிபார்த்து பின் மண்டல மேலாளரின் பரிந்துரை மற்றும் அறிக்கை பெற்ற பின் திருப்பி கொடுக்கப்படும்.

21. சரக்குகளை டெலிவரி எடுத்த 12 மணி நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கங்களில் டெலிவரி செய்துவிட வேண்டும். சிறப்பு நேர்வுகளில் விடுமுறை நாட்களிலும் சுமையுந்து மூலம் சரக்குகளை சம்பந்தப்பட்ட இடங்களுக்கு கொண்டு சேர்க்க ஒப்பந்ததாரர் முன்வரவேண்டும். தினசரி டெலிவரி எடுக்கும் உர மூட்டையின் எண்ணிக்கை, உரத்தின் எடை அளவு, முதலிய விபரங்களை தவறாமல் மண்டல அலுவலகத்திற்கு எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும்.

22. மேற்கண்ட நிபந்தனைகளை மாறுதல்கள் செய்யவோ, புதிய நிபந்தனைகளை அளிக்கவோ, நிபந்தனைகளை நிறுத்தி வைக்கவோ மற்றும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்யவோ அல்லது மறு ஒப்பந்தப்புள்ளி கோரவோ அல்லது கூடுதலாக மேலும் ஒப்பந்ததாரர்கள் நியமிக்கவோ இணையத்திற்கு முழு அதிகாரம் உண்டு.

23. **வேகனிலிருந்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு நேரடியாக உரங்களை அனுப்பச்சொல்லி Despatch Advice கொடுத்தபடி கண்டிப்பாக நேரடியாக உரங்களை அனுப்ப போதுமான லாரிகள் ஏற்பாடு செய்து வேகனில் இருந்து நேரடியாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு உரங்கள் அனுப்பி வைக்கப்படவேண்டும். தவறும்பட்சத்தில் கூடுதல் போக்குவரத்து கட்டணம் ஒப்பந்தக்காரரிடம் இருந்து வசூலிக்கப்படும்.**

ஒப்பந்தப்புள்ளி கேட்பு அளிப்பவர் /
ஒப்பந்தப்புள்ளி பங்குபெற அதிகாரம் அளிக்கப்பட்டவர் ஒப்பம்

..6..

24. இணைய கிடங்குகளில் மற்றும் இரயில்வே சரக்கு வேகன்களில் வரும் சரக்குகளை இறக்கவும், ஏற்றவும் தேவைப்படும் சுமையுந்து, கூலி ஆட்களையும் ஒப்பந்ததாரரே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும். வேகனிலிருந்து உர மூட்டைகளை இறக்கவும் ஏற்றவும் செய்யும்போது சுமையுந்து தொழிலாளர்கள் ஊக்குபோட்டு உர மூட்டைகளை சேதப்படுத்தக்கூடாது. அவ்வாறு சேதம் ஏற்படுத்தப்பட்டால் அதனை சரி செய்யும் நடவடிக்கைகளை ஒப்பந்ததாரர் தனது பொறுப்பிலும், செலவிலும் மேற்கொள்ள வேண்டும்.

25. போக்குவரத்துக்கு உபயோகப்படுத்தும் சுமையுந்து, எந்த பருவ காலத்திற்கும் ஏற்றதாகவும் நெடுஞ்சாலைப் பயணத்திற்கு ஏற்றதாகவும் இருக்க வேண்டும். உரங்கள் மழையினால் நனையாமல் இருக்க போதுமான எண்ணிக்கை தார்ப்பாய்கள் ஒவ்வொரு லோடுக்கும் தவறாமல் உபயோகப்படுத்துவதோடு தார்ப்பாய் கட்டில் முத்திரையிட்டு (Seal) அனுப்பப்பட வேண்டும்.

26. உர நகர்வு சுமையுந்து ஒப்பந்தப்பணியில் ஈடுபடுத்தப்படும் தொழிலாளிகள் ஒப்பந்ததாரரைச் சேர்ந்தவர்களே ஆவார்கள். மேற்படி ஆட்கள் ஏதாவது வேலை செய்தோ, செய்யாமலோ ஏற்படும் நஷ்டத்திற்கு ஒப்பந்ததாரரே பொறுப்பாவார். மேற்படி ஆட்கள் தவறு செய்யும் பட்சத்தில் நபர்களை பணியிலிருந்து நீக்கம் செய்ய ஒப்பந்ததாரர் பொறுப்பேற்க வேண்டும். அந்த தொழிலாளர்கள் இணையத்திடம் எந்த வித சலுகையும், உரிமையும் கோரமுடியாது.

27. **போக்குவரத்து ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் சரக்கு மற்றும் சேவைவரி பதிவினை (GST) கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும் (GST) வரிப்பதிவினை மேற்கொள்ளாத நபர்கள் / நிறுவனங்கள் இந்த ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்றிட இயலாது.** சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பாகவும் (அல்லது இந்த விதிகளில் செய்யப்படும் மாற்றங்கள் அனைத்தும் கடைபிடிக்க ஒப்பந்ததாரர் முழு ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும் இவற்றை கடைபிடிப்பதில் ஒப்பந்ததாரர் தவறும் பட்சத்தில் இதனால் இணையத்திற்கு ஏற்படும் சிரமங்கள் மற்றும் அபராதம் ஆகியனவற்றை ஒப்பந்ததாரர் முன்னின்று சரி செய்திடுவது அவரது பொறுப்பாகும்.

28. அ) மோட்டார் ஆயில், டீசல், மோட்டார் உதிரி பாகங்கள் மற்றும் இதர சுமையுந்து தளவாடச் சாமான்கள் விலையேற்றங்கள் இதர கூலி உயர்வுகள் ஏற்படும்போது கட்டண உயர்வு எதுவும் இடைப்பட்ட ஒப்பந்தகாலத்தில் அளிக்கப்படமாட்டாது.

ஆ) மேற்படி காரணங்காட்டி குறித்த காலத்தில் ஒழுங்காகவும், காலதாமதமின்றியும் உரம், பூச்சி மருந்துகள் எடுத்துச் செல்ல தவறினால் இணையத்திற்கு ஏற்படும் நஷ்டத்தை போக்குவரத்து ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும்.

இ) ஒப்பந்தகாலம் நடைமுறையில் உள்ள காலத்தில் ஒப்பந்தம் ஆணை இணையத் தலைமை அலுவலகத்தால் அளிக்கப்பட்ட நாளில் உள்ள டீசல் கட்டணம் அடிப்படையில் அடுத்து வரும் மாதங்களில் ஒவ்வொரு மாதமும் முதல் நாளில் உள்ள கட்டணத்தில் உள்ள "குறைவு" மற்றும் "அதிகம்" கணக்கிடப்பட்டு பின்வரும் பார்முலா படி அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தில் மாற்றம் செய்து கட்டணம் வழங்கப்படும்.

<u>உயர்ந்துள்ள டீசல் கட்டணம் லிட்டர் ஒன்றிற்கு ரூ.</u>

$10 \times 4 = 40$

= உயர்வு/குறைவு டன் ஒன்றிற்கு மற் றும் கிலோ மீட்டர் ஒன்றிற்கு கணக்கிடப்படும்

**(மேற்குறிப்பிட்ட டீசல் கட்டண உயர்வு மினி டிரக்குக்கு பொருந்தாது)**

ஒப்பந்தப்புள்ளி கேட்பு அளிப்பவர் /
ஒப்பந்தப்புள்ளி பங்குபெற அதிகாரம் அளிக்கப்பட்டவர் ஒப்பம்

..7...

29. ஒப்பந்ததாரர்கள் தங்களுக்கு ஒப்பந்தம் கிடைக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட மண்டலம் தவிர மற்றைய மண்டலங்களுக்கும் இணையத்தின் எந்த யூனிட்டுக்கும் அங்கீகரிக்கப்பட்ட விகிதத்தில் உரம் மற்றும் பூச்சி மருந்துகளை எடுத்துச் செல்ல தயாராக இருக்க வேண்டும்.

30. மண்டல அலுவலகத்தின் தேங்கியுள்ள பழைய உரங்களை பிற மண்டலத்தின் கிட்டங்கிகளுக்கோ அல்லது பாமணி உர ஆலைக்கோ (மன்னார்குடி மற்றும் திண்டுக்கல்லில் அமைந்துள்ளது) அங்கீகரிக்கப்பட்ட கட்டண விகிதத்தில் எடுத்துச் செல்லவும் தயாராக இருக்க வேண்டும்.

31. ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பிக்கும் ஒவ்வொரு பில்லுக்கும் சட்ட நடைமுறைப்படி வருமான வரி பிடித்தம் செய்யப்படும்.

32. சுமையுந்துகட்கு உரிய சாலைவரி கட்டணம், வாகனவரி கட்டணம், சுங்கவரி கட்டணம் மற்றும் அரசால் வசூலிக்கப்படும் வரிகள் அனைத்தும் ஒப்பந்ததாரரே செலுத்த வேண்டும் இவற்றில் ஏற்படும் உயர்வு/குறைவுக்கு இணையம் பொறுப்பேற்காது.

33. ஒரே மையத்திற்கு, ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களை அமர்த்த இணையத்திற்கு அதிகாரமுண்டு. 'L1' நிர்ணயம் செய்யும்போது அனைத்து கட்டணங்களிலும் குறைவாக இருந்தால் அந்த அடிப்படையில் 'L1' தாரர் நிர்ணயம் செய்யப்படும். ஒவ்வொரு நிலையிலும் 'L1' கட்டணம் மாறுபடும் நிலையில் கடந்த ஆண்டுகளின் உர நகர்வு அளவு அடிப்படையில் ஒட்டுமொத்த கட்டண செலவு கணக்கிடப்பட்டு 'L1' நிர்ணயம் செய்யப்படும். இதில் இணைய கணக்கீடு இறுதியானதாக அமையும்.

34. மற்ற இனங்களில் சமமாக இருந்து அதிகமாக சுமையுந்து தன்னகத்தே கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்க இணையத்திற்கு அதிகாரமுண்டு.

35. ஒப்பந்தம் சம்பந்தமாக எழும் அனைத்து தகராறுகள், தாவா, பிரச்சனைகள், கோரிக்கைகள் ஆகியவையும் இருசாரும் தலா ஒரு நபர் வீதம் நியமிக்கும் இரு ஆர்பிட்ரேட்டர்களிடம் ஆர்பிட்ரேஷனுக்கு விடப்படும். அந்த இரு ஆர்பிட்ரேட்டர்கள் சேர்த்து ஒரு அம்பயரை நியமிப்பர், இந்த மூவர் கொண்ட ஆர்பிட்ரேட்டர்களின் முடிவு இறுதியானதாகும்.

36. இந்த ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் குறிப்பிடப்பட்ட உரம் என்பது இரசாயன உரம், நீரில் கரையும் உரங்கள், நுண்ணூட்டச் சத்து மற்றும் நுண்ணூட்டச் சத்து கலப்புரங்கள், இயற்கை உரங்கள், புண்ணாக்கு பசுமை உரங்கள் (City Comost ), மண்புழு உரம், பூச்சி மருந்து, உயிர் உரங்கள் மற்றும் இணையத்தால் தயாரிக்கப்படும் அனைத்திற்கும் பொருந்தும்.

37. இந்த ஒப்பந்தம் தொடர்பாக எந்தப்பொருளின் மீதாவது அர்த்தம் செய்வதில் இணைய மேலாண்மை இயக்குநர் எடுக்கும் முடிவே இறுதியானது. இந்த முடிவு இரு தரப்பினரையும் கட்டுப்படுத்தும்.

38. இந்த ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் இது தொடர்பாக ஏற்படுத்தப்படவுள்ள ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக கருதப்படும்.

ஒப்பந்தப்புள்ளி கேட்பு அளிப்பவர் /
ஒப்பந்தப்புள்ளி பங்குபெற அதிகாரம் அளிக்கப்பட்டவர் ஒப்பம்

**APPENDIX-I**
**TENDER FOR TRANSPORT**
**CERTIFICATE / Letter of Undertaking**
**(To be submitted along with the Tender)**

To

The Managing Director,
Tamil Nadu Coop. Marketing Federation Ltd.,
91, St. Mary's Road,
Chennai 600 018.

Sir,

Sub: Undertaking for participating in the Tender for Transport – Reg.

*************

1) I/We --------------------- have gone through the Terms and Conditions and Scope of Work and will abide by them as laid down (Tender Documents, Technical bid and Price Bid)
2) I/We ---------------------- hereby confirm that our Company was not blacklisted by any State Government/ Central Government/ Public Sector Undertakings during the last three years. We also hereby confirm that our EMD/SD was not forfeited by any State Government / Central Government / Public Sector Undertakings during the last three years due to our non-performance, non-compliance with the tender conditions etc.
3) I/We ----------------------------------------------------- hereby declare that all the particulars furnished by us in this Tender are true to the best of my/our knowledge and we understand and accept that if at any stage, the information furnished by us is found to be incorrect or false, we are liable for disqualification from this tender and also are liable for any penal action that may arise due to the above.
4) **In case of violation of any of the conditions above, I/We......................... Understand that I/ We are liable to be blacklisted by TANFED for a period of three years.**
5) **I/We**.........................Certify to the effect that we Contractor was not penalised or Black listed for their Non Performance/Non Compliance by any of the Government /Coop. Institutions.
6) **I/We**.........................Certify to the effect that there is no Dispute/Court cases pending before any of the Court /Appropriate Forum in the Country with regard to the Quality of their product or for any other lapses.

for ________________

Name, Signature, Designation and Seal

**Place Name and address**
**Date:**
**Company Seal**
**WITNESS SIGNATURE:**
**Name, Address and Occupation of witness.**
**Note:**

1) Declaration in the company's letter head should be submitted as per format given Above:
2) If the bidding firm has been blacklisted by any State Government / Central Government/ Public Sector Undertakings earlier, then the details should be provided.